# தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத ரூபா 3,346 தொகையான மீதி காசேடு எழுதப்படுகையில் நேர்ந்த குறைபாடு காரணமாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டு மீதிக்கும் திரண்ட பற்றாக்குறை மற்றும் மிகை கணக்கிற்கும் சீராக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், அதே தொகையால் காசேட்டில் மீதி மற்றும் திரண்ட பற்றாக்குறை மற்றும் மிகை கணக்கு மீதி குறைவடைந்திருந்தன.

#### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்ட ரூபா 7,642,763 தொகையான 03 சொத்துக்களின் மீதிகளையும் ரூபா 437,324 தொகையான கடன் மீதிகளையும் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | வாகனப் பழுதுபார்த்தல்கள் | 727,724 | வாகன தொழிநுட்பவியலாளரின் பரிந்துரை |
| (ஆ) | ஐஎஸ்ஐஎப் செயற்திட்டத்தின் உத்தியோகத்தர் கொடுப்பனவு | 3,979,926 | கொடுப்பனவு விபரம் மற்றும் நியமனம்/ பணி ஒப்படைப்புக் கடிதம் |
| (இ) | மட்டக்குளி கட்டிடத்தினதும் கொரிடோவின் மேலதிக வேலை | 1,619,256 | மேலதிக வேலைக்கான அங்கீகாரம் |
| (ஈ) | செலுத்த வேண்டிய மீதி | 2,935,754 | பட்டோலை, மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (உ) | ஊழியர் கடன் | 11,104,863 | மேற்படி |
| (ஊ) | மட்டக்களப்பு பிராந்திய வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் | 1,078,400 | செய்யப்பட்ட வேலை அறிக்கை மற்றும் செயற்திட்டத்தின் பதவியணி தகவல்கள் |
| | | 21,445,923 | |

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | | **இணங்காமை** |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் | | |
| (i) | நி.பி. 104 | மோட்டார் வாகனத்திற்கு ஏற்பட்ட தாக்கத்திற்காக ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கை தயாரிக்கப்படுவதற்கும் அதனை மீளளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 137(5) | 02 சந்தர்ப்பங்களின் போது பொருட்கள் பெறப்படுவதற்கு முன்னர் ரூபா 3,029,994 தொகையான மொத்த தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | நி.பி. 396(ஈ) | வழங்கப்பட்ட எனினும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 452,045 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | | |
| (i) | 1.3.2 வழிகாட்டல் | விலைக் கோரல்கள் இன்றி 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,362,405 கூட்டுத்தொகையான பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ii) | 3.2 வழிகாட்டல் | 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,701,803 தொகையான கொள்வனவுகளுக்காக தேசிய போட்டி விலைமனுக்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 3.3 மற்றும் 3.5 வழிகாட்டல் | மட்டுப்படுத்தப்பட்ட விலை கோரல்களின் கீழ் ஏனைய வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட வேண்டியதுடன் நேரடி ஒப்பந்த முறைமை இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவை எவற்றிற்கும் இணங்காது ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் விலை கூறல்கள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 2,049,994 தொகையான கடல்சார் வரைபடங்கள் மற்றும் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (iv) | 5.4.4 வழிகாட்டல் | 6 சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவு உத்தரவாதம் இல்லாமல் மொத்தப் பெறுமதியில் 25 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 3,563,962 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (v) | 5.6.1 வழிகாட்டல் | 06 சந்தர்ப்பங்களின் போது மாதிரிகள் காண்பிக்கப்படாது ரூபா 9,750,427 தொகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (vi) | 8.9.1 (ஆ) வழிகாட்டல் | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 500,000 இற்கு மிகையான கொள்வனவிற்கு உடன்படிக்கை செய்யப்படாமல் ரூபா 13,542,714 கூட்டுத்தொகையான பொருட் கொள்வனவு 07 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (vii) | 8.13.3 வழிகாட்டல் | முறையான அங்கீகாரம் இன்றி மதிப்பிடப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | தொகையில் 10 சதவீதத்தை மிகைத்து 28 சதவீதமும் 16 சதவீதமாகும் வகையில் 02 தொழிற்சாலைகளில் மேலதிக வேலைக்காக ரூபா 2,364,590 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2011 திசெம்பர் 31 ஆம் திகதிய 6/2010 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்னங்கீகாரம் இன்றி 2011 ஆம் ஆண்டின் போது 14 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த மற்றும் ஒப்படை அடிப்படையில் நியமிக்கப்பட்டு 2012 யூலை வரை ரூபா 4,270,183 தொகையான சம்பளங்களும் படிப்பணங்களும் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 42.51 மில்லியன் தொகையான பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 31.85 மில்லியன் தொகையானமையால் நிதிவிளைவுகளில் ரூபா 10.66 மில்லியன் தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அவ்வீழ்ச்சி தொடர்பாக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 32.84 மில்லியன் தொகையால் அதிகரித்தமை குறிப்பாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

3.1.1 விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் மட்டக்களப்பு பிராந்தியக் கல்லூரியின் ஓர் கட்டிட நிர்மாணிப்பிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 20,000,000 தொகையான ஏற்பாடுகளில் 2012 ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 1,078,400 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையில் 2.5 பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.1.2 மட்டக்களப்பு பிரதேச வித்தியாலயத்தின் ஓர் பாடநெறியில் கலந்துகொண்டவர்களுக்கு மீன்கள் உற்பத்தியாக்கும் 56 உபகரணங்கள் வழங்கப்படுவதற்கு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 547,000 தொகை தனியார் நிறுவகம் ஒன்றிடமிருந்து பெறப்பட்டிருந்தது. இது தொடர்பான ஆய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாடநெறி இறுதியில் கொள்வனவு செய்யப்படாது இதற்கு 03 ஆண்டு காலங்களின் பின்னர் இதனிலும் கூடிய விலைக்கு மேற்குறித்த 16 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 14,480 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீன்கள் உற்பத்தி செய்யும் 40 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிராமையால் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆகஸ்ட் வரை ரூபா 412,520 தொகை விளைவற்றுக் காணப்பட்டதுடன் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக அப் பாடநெறியைப் பயின்ற மாணவர்களும் வேறு வேலைகளுக்காகச் சென்றிருந்தனர். பின்னர் அப்பணத்தில் வேறு பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எய்தப்பட்டிருக்கவில்லை.

3.1.3 மீனவர்களுக்குத் தேவையான பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நடமாடும் தகவல்கள் பரிமாற்ற பிரிவொன்று (Mobile Trading Portal Server) தயாரித்து ஸ்தாபிக்கப்படுவதற்கும் அவற்றின் இயக்க அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்காக ரூபா 6,282,320 (அவுஸ்திரேலியா டொலர் 60,500) மதிப்பிடப்பட்டிருந்தது. வெளிநாட்டு நிதியத்தால் 2011 ஆகஸ்ட் மாதம் ரூபா 4,153,600 (அவுஸ்திரேலியா டொலர் 40,000) அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 3,979,927 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இச் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு நிதியத்தால் வழங்கப்பட்ட தொகை தவிர்ந்த எஞ்சிய ரூபா 2,128,720 (டொலர் 20,500) தொகை வழங்கப்படும் விதம் தொடர்பாக ஓர் திட்டம் இருக்கவில்லை.

(ஆ) முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், அத் தொடர்பாடல் பிரிவு உருவாக்கப்பட்ட போதிலும் அது ஸ்தாபிக்கப்பட்டு மீனவர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கு 2012 திசெம்பர் அளவிலும் இயலாதிருந்தது. ஆகையால் அச் செயற்திட்டத்தின் நோக்கத்தை எய்தியிராததுடன் செலவிடப்பட்ட ரூபா 3,979,927 தொகை உரிய அலகு செயற்படும் வரை விளைவற்ற செலவினமாகியிருந்தது.

3.1.4 2011 திசெம்பர் மாதம் நடாத்தப்பட்ட மீனம்பர் மற்றும் டொல்பின் மீன்கள் பார்வையிடும் செயற்திட்டத்தின் சமகால விழாவிற்காக ரூபா 328,239 செலவிடப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு முதல் அமுலாகும் இச் செயற்திட்டம் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு விழாவொன்றை நடாத்துவது சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கலானதுடன் விழாவின் பின்னர் இரு நாட்கள் சுற்றுலாப் பயணிகளுடன் கரையோர சுற்றுலா மேற்கொள்ளப்பட்ட போதும், இதன் பின்னர் 2012 திசெம்பர் மாதமளவில் அச் செயற்திட்டம் செயற்பட்டிருக்கவில்லை.

**3.1.5 பாடநெறிகளை நடாத்தல்**

(அ) பட்டப் படிப்பு பாடநெறிகளை நடாத்தல்

பட்டப் படிப்பு பாடநெறிகளை நடாதத்தும் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| | | மாணவர்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| **ஆண்டு** | **2012.01.01 இல் உள்ளவாறு** | **ஆண்டின் போது சேர்க்கப்பட்டோர்** | **இடைநடுவில் பாடநெறியை விட்டுச் சென்றோர்** | **ஆண்டின் போது பாடநெறியை பூர்த்தி செய்தோர்** | **2012.12.31 இல் உள்ளவாறு** |
| 2009 | - | 13 | 02 | - | 11 |
| 2010 | 11 | 32 | 05 | - | 38 |
| 2011 | 38 | 33 | 01 | - | 70 |
| 2012 | 70 | 18 | 04 | - | 84 |

(ஆ) டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறி நடாத்தல்

பிராந்திய கல்லூரிகளில் 2012 ஆண்டின் போது டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிக்காக மாணவர் பங்கேற்பு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| **வித்தியாலயம்** | **2012.01.01 இல் உள்ளவாறு** | **ஆண்டின் போது சேர்க்கப்பட்டோர்** | **இடைநடுவில் பாடநெறியை விட்டுச் சென்றோர்** | **ஆண்டின் போது பாடநெறியை பூர்த்தி செய்தோர்** | **2012.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு பர்டநெறியைக் கற்றோரின் எண்ணிக்கை** |
| திருகோணமலை | - | 95 | 15 | 80 | - |
| நீர்கொழும்பு | 30 | 109 | 34 | 70 | 35 |
| மட்டக்களப்பு | - | 103 | 22 | 67 | 14 |
| யாழ்ப்பாணம் | - | 161 | 07 | 140 | 14 |
| மட்டக்குளி | 42 | 172 | 37 | 101 | 76 |
| களுத்துறை | 32 | 48 | 15 | 38 | 27 |
| காலி | 40 | 104 | 23 | 78 | 43 |
| தங்காலை | 45 | 231 | 93 | 82 | 101 |
| | 189 | 1023 | 246 | 656 | 310 |

(இ) பட்டம் தவிர்ந்த ஏனைய பாடநெறிகளை நடாத்தல்

2012 ஆம் ஆண்டின் போது பட்டம் தவிர்ந்த ஏனைய பாடநெறிகளை நடாத்தலின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| வித்தியாலயம் | டிப்ளோமா பாடநெறி | சான்றிதழ் பாடநெறி | 10 – 48 நாட்களுக்கு இடைப்பட்ட பாடநெறி | கணனிப் பாடநெறி | நடைமுறை பாடநெறி | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை | 23 | 50 | 07 | | 205 | 285 |
| நீர்கொழும்பு | 07 | 26 | 37 | | 299 | 369 |
| மட்டக்களப்பு | - | 18 | 49 | | - | 67 |
| யாழ்ப்பாணம் | - | 30 | 110 | | 25 | 165 |
| மட்டக்குளி | 25 | 76 | - | | 39 | 140 |
| களுத்துறை | 11 | 27 | - | | - | 38 |
| காலி | 08 | 31 | 39 | | - | 78 |
| தங்காலை | - | 43 | 10 | 29 | - | 82 |
| | 74 | 301 | 252 | 29 | 568 | 1224 |

(பிராந்திய வித்தியாலயங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.)

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் அறிவை மேம்படுத்துவது நிறுவனத்தின் முக்கிய நோக்கான போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது தங்காலை பிரதேச கல்லூரியின் ஒட்டுமொத்த மாணவர்களின் பங்கேற்பில் 59 சதவீதமானவர்கள் கணனி சார்ந்த பாடநெறிகளைப்

பின்பற்றியிருந்தனர். 2012 ஆம் ஆண்டின் போது இது 35 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(ii) ஆண்டின் போது கல்வி கற்றுவந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 20 சதவீதமானவர்கள் இடைநடுவில் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

(iii) ஆண்டின் போது பயிற்சிகள் வழங்கப்பட்ட 1224 பேரில் 568 பேர் அதாவது 46 சதவீதம் ஒரு நாள், இருநாட்கள் அல்லது ஐந்து நாட்கள் நடமாடும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்டிருந்தனர். அத்தகைய நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் பயிற்றப்பட்ட ஊழியர்கள் உருவாகாமையால் கடற்றொழில் துறைக்கு பயிற்றப்பட்ட ஊழியர்கள் உருவாக்கும் அடிப்படை நோக்கம் எய்தப்படுவதில் மந்த கதி நிலை நிலவியது.

(iv) வேறு எவ்வித வெளிச் செயற்பாட்டிலும் ஈடுபடாது தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் ஒரே அடிப்படை பணி பாடநெறியை நடாத்துவதான போதிலும் ஏதேனும் ஓர் ஆண்டில் பாடநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களின் எண்ணிக்கை அவ்வாண்டின் போது நிறுவகத்தின் ஒட்டுமொத்த படைப்பாகும். இதன் பிரகாரம், 2012 ஆம் ஆண்டின் போது செலவிட்ட ரூபா 150,222,463 தொகையான மீண்டெழும் செலவினம், ஒட்டுமொத்த படைப்பான நடமாடும் பாடநெறி தவிர்ந்த டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வருடாந்தம் மாணவன் ஒருவனுக்கான கிரயம் ரூபா 228,998 ஆகக் காணப்பட்டது.

(v) பட்டப் படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களின் முன்னேற்றம் மீதான பின்தொடர்நடவடிக்கை எடுக்கும் முறைமையொன்று நிறுவகத்திடம் இருக்கவில்லை.

(உ) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை

தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்ட 1996 இன் 36 ஆம் இலக்க தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட செயற்பணிகளில் பாடநெறி நடாத்துவது தொடர்பான (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் தவிர்ந்த அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் துறையின் கல்வி தொடர்பாக கலந்துரையாடல்களும் கருத்தரங்குகளும் நடாத்தல்.

(ii) கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் துறையின் கல்வி மற்றும் விஸ்தரிப்புப் பயிற்சி தொடர்பான ஆராய்ச்சி, மீளாய்வு மற்றும் விசாரணைகள் நடாத்தல்.

(iii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பரிமாற்றம் செய்தல்.

## 3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தின் தங்காலை நகரத்தில் இருந்த கடை 2011 யூன் மாதத்தின் போது ஒரு வருடத்திற்காக ரூபா 21,000 தொகையான வைப்பொன்றில் வாடகைக்கிடப்பட்டிருந்த போதிலும் மாதாந்தம் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. 2012 யூன் மாதமளவில் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அச் சொந்த உரித்தேனும் 2012 செப்தெம்பர் மாதம் வரை ஒரு மாதத்திற்கு ரூபா 7,500 படி ரூபா 105,000 கூட்டுத்தொகையான நிலுவை வாடகையும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தங்காலை பிரதேச கல்லூரியின் பயன்பாட்டிற்காக பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் பாரிய 02 இயந்திரங்களும் சிறிய 02 படகுகளும் காணப்பட்டன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விபத்திற்குட்பட்ட மீன்பிடிப் படகுகளைக் காப்பாற்றி 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 714,565 தொகையான வருமானம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது இதன் மூலம் எவ்வித வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை. பிரதேசத்தவர்களுக்கும் சேவையை வழங்கக்கூடிய அச் செயற்பாட்டிற்காக நிலவும் படகைப் பழுதுபார்க்கப்பட்டுப் பயன்படுத்தப்படுவதற்கு நிறுவனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ii) ஒரு படகில் சம்பவக் குறிப்பேட்டுப் புத்தகம் மற்றும் எரிபொருள் பதிவேடும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. படகோட்டுனர் லீவில் செல்வதன் காரணமாக அப் படகு பௌதீக மெய்மையாய்வு செய்யப்படுவதற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கும், அவ் உத்தியோகத்தரின் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியேதகத்தர்கள் தொடர்பாக விளக்குவதற்கும் படகுப் பிரிவுத் தலைவர் தவறியிருந்தார்.

(iii) மாணவர்களின் பயிற்சிக்காக மேற்கொள்ளப்பட்ட கடல் பயணம் தொடர்பான தகவல்கள் பயிற்சிப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் அவற்றின் சரியான நிலையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) கணக்காளர் உள்ளடங்கலான பதவியணியினர் இருக்கையில் அச் செயற்பாட்டிற்காக அரசாங்க ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதற்காக ஒரு உத்தியோகத்தரும் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 239,000 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வங்கிக் கணக்கிணக்கக்

கூற்றுக்கள் தவறாகக் காணப்பட்டமையால் அவற்றை மீளத் தயாரிப்பதற்கு தனியார் கணக்காய்வு நிறுவகம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பல வருடங்கள் பழைமை வாய்ந்த ரூபா 309,441 தொகையான பெறவேண்டிய 05 மீதிகள் வருமானச் செலவினக் கணக்கிற்கு பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 449 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், பணி ஒப்படைப்பின் அடிப்படையில் நியமன நாட்கள் 45 இற்கு மேற்படாத மற்றும் அவசர சேவைகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக அவசர சேவைகள் அற்ற நிறுவகத்தில் வழமையான நடவடிக்கைகளுக்காக 08 உத்தியோகத்தர்கள் 2011 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்டு 2012 யூலையில் ரூபா 3,192,099 செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமும் இருக்கவில்லை. இவ்வாறே, குறித்த காலப்பகுதிக்காக குறித்த பணி ஒப்படைப்பும் வழங்கப்பட்டிராததுடன் உரிய காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பணிகளும் தெளிவாக இனங்காணப்பட முடியாதிருந்தது. மேலும், பணி ஒப்படைப்பிற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 30,000 தொகையான கொடுப்பனவிற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 50,000 தொகையும் ரூபா 35,000 தொகையுமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கரையோர விளையாட்டு விழா நடாத்திய தங்காலை பரெய்வெல்ல கரையோரத்திற்கு கிரிந்த கரையோரத் துறைமுகத்திலிருந்து கடல்மண் கொண்டு செல்லப்படுவதற்காக ரூபா 69,000 செலுத்தப்பட்டிருந்தது. கடல்மண் பெருமளவில் காணப்படும் கரையோரப்பகுதிக்கு பணம்

செலுத்தப்பட்டு கடல்மண் கொண்டுவரப்படுவது சிக்கல்வாய்ந்ததாகக் காணப்பட்டது.

(ஆ) நிறுவகத்தின் உள்ளக வீதி 450 அடிகள் நாளொன்றிற்கு கொங்கிரீட் இடுவதனைத் துரிதப்படுத்துவதற்காக நேரடி உழைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியதாக பணி ஒப்படைப்பில் ஆட்சேர்க்கப்பட்ட பொறியியலாளரின் பரிந்துரையின் படி ரூபா 193,800 ஆன பொருட்கள் பயன்படுத்தப்பட்டு 2012 பெப்ரவரி மாதமளவில் 166 அடிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மிகவும் துரிதப்படுத்தப்பட்ட இத் துறையின் எஞ்சிய 284 அடிகளின் பகுதிகள் 2012 ஆகஸ்ட் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் உரிய பொறியியலாளர் நிறுவகத்திலிருந்தும் சேவையிலிருந்து விலகிச்சென்றிருந்தார்.

(இ) மட்டக்களப்பு பிரதேச கல்லாரி கட்டிடமொன்றின் நிர்மாணிப்பு கண்காணிக்கப்படுவது தொடர்பாக 2009 யூன் மாதம் முதல் 2012 ஆகஸ்ட் மாதம் வரை ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 200,000 தொகையான படிபணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய உடன்படிக்கையில் இதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.4 நோக்கங்களுக்கு மாறான கொடுக்கல்வாங்கல்கள்

பயிலுனர்களின் செயன்முறைப் பயிற்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில், எரிபொருளுக்காக ரூபா 225,000 செலவிடப்பட்டு 2012 ஏப்ரல் மாதம் உதவிப் பணிப்பாளர்களின் ஓர் கூட்டம் நிறுவகத்தின் ஓர் படகில் நடாத்தப்பட்டது.

## 3.5 குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

2010 ஆம் ஆண்டு முதல் 2012 செப்தெம்பர் மாதம் வரை இரு கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 29 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், அவற்றின் வாடகைப் பெறுமதி முறையே ரூபா 7,000 ஆகவும் ரூபா 7,500 ஆகவும் காணப்பட்டன.

## 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது தங்காலை வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் விஞ்ஞான பட்டப் பாடநெறிக்காக 2012 செப்தெம்பர் மாதமளவில் நிலுவையாகக் காணப்பட்ட பாடநெறிக் கட்டணம் ரூபா 2,743,000 ஆகக் காணப்பட்டது.

(ஆ) தேசிய மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கிடப்பட்டிருந்த தங்காலை நகரத்திலுள்ள இரு கடைகளுக்காக எவ்வித குத்தகை வருமானமும் 1991 ஆம் ஆண்டு முதல் 2012 செப்தெம்பர் மாதம் வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒரு பஸ் வண்டியைக் கொள்வனவு செய்வதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலைகளின் படி ரூபா 3,000,000 இற்கு 42 நிறுவகங்களுக்கு டாட்டா பஸ் வண்டி ஒன்று கொள்வனவு செய்வது ஒப்பீட்டு ரீதியாக இலாபகரமானதாகக் காணப்பட்ட போதிலும் 38 நிறுவகனங்களில் அவ் வகையான பஸ் ரூபா 3,250,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் முடிவுற்று 46 நாட்கள் கடந்த பின்னர் பொருட்கள் கட்டளையிடப்பட்ட போதிலும் இதற்கு உரித்தான வழங்குனர் உடன்பட்டிராமையால் மீள விலைகோரப்படாது அவ் வழங்குனர் பின்னர் சமர்ப்பித்த கூடிய விலையில் 80 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 256,000 தொகையான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) நிறுவகத்தின் மாதிரி தீர்மானித்து பொருட்களின் மாதிரிகளைப் பரீட்சிக்காது ஒரே நிறுவகத்தால் ரூபா 2,451,803 தொகை செலவிட்டு அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு தொழிநுட்ப

மதிப்பீட்டுக் குழு மேற்கொண்ட பரிந்துரை கணக்காய்வின் போது சிக்கல் மிக்கதாகக் காணப்பட்டமையால் ஆகக் குறைந்த விலை கருத்திற்கொள்ளப்பட்டிராமையால் 07 வகைப் பொருட்களுக்காக ரூபா 278,375 தொகை அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.7 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நூலகம் பழுதுபார்க்கப்படுகையில் ரூபா 150,000 தொகையான வேலை விடயங்கள் ஒப்பந்தக்காரர் தவிறியிருந்தார். செயற்திறன் பிணை இரத்துச் செய்வதற்கு முன்னர் அச் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதற்கோ அல்லது இதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கப்படுவதற்கு வேறு நிறுவகத்தால் அச் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதனால் ரூபா 87,856 தொகையான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. இவ்வாறே செய்யப்பட்ட வேலைகளின் சரியான தன்மை குறித்து உறுதிப்பாட்டை தொழிற்துறைத் திறமை கொண்ட ஓர் நபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்காக நூலகத் தலைவரிடமிருந்து பெறப்பட்டிருந்தது.

(ஆ) மட்டக்குளி தலைமைக் கட்டிடம் மற்றும் கொரிடோ திருத்தப்படுவதற்காக ரூபா 5,813,532 தொகையான விலைக்கூறலுக்கு கொள்வனவு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. கொள்வனவு வழங்கப்பட்டிருந்த நிறுவகம் ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்திருந்த போதிலும் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் போதிய செல்லுபடிக் காலப்பகுதிக்காக விலைக்கூறல் பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கொள்வனவு வழிகாட்டல் கைநூலின் 7.8 இன் (ஈ) வழிகாட்டலின் படி, சமர்ப்பிக்கப்பட்ட விலைகூறலின் காலப்பகுதி நியமிக்கப்பட்ட காலப்பகுதியைப் பார்க்கிலும் குறைவானதாயின் இது நிராகரிக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக

செல்லுபடிக் காலம் நீடிக்கப்படுமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டு இதன் படி கொள்வனவு வழங்கப்பட்டிருந்தது.

ii. நிறுவனத்தினால் 2012 சனவரி 26 ஆம் திகதி ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், 2012 யூலை 23 ஆம் திகதிக்கு முன்னர் உரிய பணி பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் 45 நாட் கால நீடிப்பு கோரப்பட்டிருந்தது. இதற்காக 90 நாட்கள் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் அக் காலப்பகுதிக்கும் மேலாக 2012 திசெம்பர் 12 ஆம் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. தாமதக் காலத்திற்காக கட்டணம் அறவிடப்படுவது தொடர்பாக நிபந்தனைகள் எதுவும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

iii. மதிப்பீட்டுக் கிரயமான ரூபா 5,813,532 ஆல் ரூபா 2,089,413 ஆக அதாவது 36 சதவீதத்தால் வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைமை அலுவலகத்தின் பூங்காவை அலங்கரிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்டிருந்த செயற்பாட்டுப் பிணை 2013 பெப்ரவரி மாதமளவில் முடிவுற்றிருந்தது. ஊடன்படிக்கையின் படி 2012 நவம்பர் மாதம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய அச் செயற்பாடு 2013 ஏப்ரல் மாதம் வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. தாமதக் காலத்திற்கான கட்டணத்தை அறவிடுவது தொடர்பான நிபந்தனைகள் எதுவும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திருகோணமலைப் படகின் திருத்த வேலைகள் 2013 பெப்ரவரி மாதம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2013 செப்தெம்பர் மாதமளவிலும் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தங்காலை பிராந்திய கல்லூரியின் சிற்றுண்டிச்சாலைப் பொறுப்பாளருக்கு 2011 யூன் மாதம் முதல் 2012 செப்தெம்பர் மாதம் வரை உணவு பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ரூபா

589,325 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஓப்பந்தம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் விலைக் கூறல்கள் கோரப்பட்டிருக்கவில்லை.

(ii) எழுத்து மூல உடன்படிக்கையொன்று இல்லாதிருந்ததுடன் வழங்குனர் வழங்கும் உணவு வகையின் தன்மை மற்றும் விலைகள் தொடர்பாக அல்லது எழுத்து மூல உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) உணவு பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையின் சரியான நிலை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 வேறு அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிறுவக வளங்கள்

தங்காலை விபுல மந்திர வளாகத்தில் உள்ள 2231 சதுர அடி கட்டிடம் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் சில வருடகாலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட போதிலும் இதற்காக எவ்வித வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.9 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாது உயர் கற்கைகள் தலைவர் மற்றும் சிரேஷ்ட தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக மூவர் ஆட்சேர்க்கப்பட்டு 2012 யூலை மாதமளவில் ரூபா 1,978,118 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் முதல் நிறுவகத்தின் எழுதுவினைஞர் வேறு அரசாங்க நிறுவகத்திற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 செப்தெம்பர் வரை அவரது சம்பளம் நிறுவகத்தால் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 272 பேரைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 115 பேருக்கான வெற்றிடம் காணப்பட்டதுடன் இதில் உயர் கல்வி, பயிற்சி, கட்டுப்பாடு மற்றும் நிதி போன்ற பணிப்பாளர் பதவிகளும் காணப்பட்டன.

(ஈ) 2011 ஒக்டோபர் முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட (பயிற்சி) பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக பிரதி பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 உப பிரிவின் படி பதில் கடமையாற்றும் நியமனம் என்பது நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை தற்காலிகச் செயற்பாடான போதிலும் 2013 ஏப்ரல் மாதமளவில் பதில் கடமையாற்றும் நியமனம் மேற்கொள்ளப்பட்டு 1 ½ ஆண்டு காலம் கடந்திருந்தது. இவ்வாறே நியமனத் திகதியிலிருந்து 2013 ஏப்ரல் வரை பதில் கடமைப் படிப்பணமாக ரூபா 167,605 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் தாபனவிதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் உப பிரிவின் படி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) விரிவுரையாளர் மற்றும் கல்லாரி விரிவுரையாளர் பதவிகளில் 27 பேர் அதாவது 47 சதவீதம் வெற்றிட நிலையில் காணப்பட்டது.

(ஊ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்த இல. டீஎம்எஸ்/ஈ4/50/7/298/1(வீஓஎல் 1) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவிகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அதுவரையில் அப் பதவிவகிப்பவரின் சேவை பூர்த்தியாவதுடன் அப் பதவி வலுவிழந்திருந்தது. இதன் படி, அப் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரின் ஆறு மாத சேவைக்காலம் 2012 ஏப்ரல் 07 ஆம் திகதி பூர்த்தியடைய வேண்டிய போதிலும் 2013 ஏப்ரல் 26 கணக்காய்வுத் திகதி வரையிலும் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை அப் பதவி வகிக்கும் உத்தியோகத்தரின் சேவைக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இதன் படி அங்கீகரிக்கப்பட்டிராத ஓர் பதவிக்காக 2012 ஏப்ரல் மாதம் முதல் 2013 ஏப்ரல் மாதம் வரை ரூபா 390,000 செலுத்தப்படுவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(எ) திறைசேரியினதும் வரிசை அமைச்சுச் செயலாளரினதும் அங்கீகாரம் இன்றி 2011 மே மாதம் இயந்திர ஆலொசகர் பதவிக்காக ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு வேலை செய்யும் ஒரு நாளுக்கு ரூபா 3,750 படி 2013 மார்ச் மாதம் வரை ரூபா 833,203 படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.10 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒரு லொறி வண்டிக்காக ஸ்டாடர் மோட்டர் பொருத்தப்பட்டிராமையால் 2012 ஒக்டோபர் கணக்காய்வுப் பரிசீலனைத் தினம் வரையிலும் அவ் வண்டி தங்காலை, விபுல மந்திர வளாகத்தில் மூடப்படாமல் உக்கிக் காணப்பட்டது. மேற்குறித்த பழுதுபார்த்தல் தவிர்ந்த இவ் வாகனத்தை ஓட்டத்திலிருந்து அகற்றப்படுவதற்கான காரணங்களைப் போன்று அது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட நாள் மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணை எதுவும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஸ்டாடர் மோட்டர் பொருத்தப்படுவது போன்ற சிறிய திருத்த வேலையை மேற்கொள்ளாது அது உக்கலடைவதற்கு இடமளிப்பது தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) டிப்போ பொறியியலாளரால் நிறுவகத்தில் பஸ வண்டி ஒன்றின் பழுதுபார்த்தல் தொடர்பாக வழங்கப்பட்ட அறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் 2008 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட மூடப்படாது 2012 செப்தெம்பர் வரையிலும் தங்காலை பிரதேச வித்தியாலய வளாகத்தில் உக்கிய நிலையில் காணப்பட்டது. இவ்வாறே, இது பழுதுபார்க்கப்பட முடியாத நிலைக்கு உட்பட்டிருந்த டிப்போ பொறியியலாளரால் 2012 செப்தெம்பர் 13 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் படி உறுதிப்படுத்தப்பட்டது. தேவையான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாது அது உக்கலடைவதற்கு இடமளிப்பது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் தங்காலை

வித்தியாலயத்தின் இயந்திரப் பயிற்சிப் பாடநெறிக்காக இவ் வண்டியை வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 04 ஆண்டுகளுக்கு மேல் காணாமற் போன மோட்டார் சைக்கிள் தொடர்பாக நிறுவனம் எவ்வித நடவடிக்கையும் எடுத்திராததுடன் கணக்காய்வு ஐயவினாக்களின் காரணமாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை 2013 சனவரி மாதம் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு 2013 ஒக்டோபர் மாதமளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உக்கிய 4 வாகனங்களும் சுனாமிப் பேரழிவில் அழிவிற்குள்ளான 03 வாகனங்களும் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) உலக உணவு மற்றும் கமத்தொழில் அமைப்பால் மீள்மதிப்பிடப்பட்ட 05 வாகனங்களும் மீன்பிடி அமைச்சால் பெறப்பட்ட வாகனத்தின் உரித்து நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் உப பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவு தொடர்பான மீளாய்வொன்று 2012 – 2014 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டு கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, எதிர்கொள்ளப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதி காண்பிக்கப்பட்டு வருடாந்த முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு இயலுமான வகையில் கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டுத் திட்டம்

திட்டமிடப்பட்ட காலப்பகுதியின் போது எய்தப்பட வேண்டிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுடன் முகாமைத்துவத்தின் பொறுப்புகள் தெளிவாக இனங்காணப்பட்டு செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய

போதிலும் மூலதனச் செலவினம் தொடர்பான ஓர் திட்டமொன்று மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4.3 கொள்வனவுத் திட்டம்

அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2(இ) வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியாகும் நாளிற்கு பாதீடிடப்பட்ட ஐந்தொகை, வருமானச் செலவினக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு பணிப்பாளர் சபையால் 2012 மே 04 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கொள்வனவு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
(உ) பதவியணி நிர்வாகம்